**தலைப்பு – 120 சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

**I ஆம் பகுதி**

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 217 | சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,245,916,716 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 1,223,286,171 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு முறையே ரூபா 20,707,776 மற்றும் ரூபா 1,922,769 அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 1.98 சதவீதம் மற்றும் 0.96 சதவீதம் ஆகக் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 120 | 1,044,941,116 | 1,024,233,340 | 20,707,776 | 1.98 |
| 217 | 200,975,600 | 199,052,831 | 1,922,769 | 0.96 |
| மொத்தம் | **1,245,916,716** | **1,223,286,171** | **22,630,545** | 1.82 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12001 | 22,000,000 | 14,522,650 | 800,000 | 14,281,050 | 80,000,000 | 53,494,203 |
| 21701 | 12,000,000 | 8,677,863 | 700,000 | 9,308,540 | 75,000,000 | 38,950,014 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 7,258,036 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 7002/0000/00/0379/0013/000 | 2,446,820 |
| சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களம் | 7002/0000/00/0106/0013/000 | 4,811,216 |
| மொத்தம் | | 7,258,036 |

### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 7,161,467 கூட்டுமொத்தமாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0098/000 | 2,340,372 |
| சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களம் | 6000/0000/00/0015/0098/000 | 9,880 |
| | 6000/0000/00/0006/0079/000 | 4,811,215 |
| மொத்தம் | | 7,161,467 |

## 2 ஆம் பகுதி

--------------------------------

## ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

-----------------------------------------------------------------------

## 1. தலைப்பு 120 – சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு

---------------------------------------------------------------------------------------------------------------------

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| பொருட் பதிவேடு | நிதிப் பிரமாணம் 445 |
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அறிக்கையிடப்பட்டதன்படி நிதிப்பிரமாணம் 272(2) இன் படி செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாத அமைச்சிற்குரிய ரூபா 491,808 பெறுமதியான 08 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்தன.

### (இ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 15,517,838 ஆகும்.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 350,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) பன்னிரெண்டு செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 17 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 371(2) இன் ஏற்பாடுகளின் படி செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகப் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 26 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியிலிருந்து உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாத ரூபா 2,265 முதல் ரூபா 51,260 வரையிலான வீச்சிலுள்ள பணம் 05 நாட்கள் முதல் 84 நாட்கள் வரையிலான கால இடைவெளியில் கையில் வைத்திருக்கப்பட்டதன் பின்னர் அமைச்சிற்கு தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) சரியான மதிப்பீட்டின்றி 13 சந்தர்ப்பங்களின் போது செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டமையினால் உரிய செயற்பாடு நிறைவு பெற்ற பின்னர் ரூபா 8,822 முதல் ரூபா 47,000 வரையிலான வீச்சில் ரூபா 314,066 கூட்டுத்தொகையான கட்டுநிதி சேமிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அந்தக் கட்டுநிதி பணமாக தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 448,916 கூட்டுப்பெறுமதியான 07 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 222,540 கூட்டுத்தொகையான முற்பணம் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவிட வேண்டிய ரூபா 6,310 வட்டிப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 32,072 கூட்டுத்தொகையான கடன் மீதி ஆண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்படி அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் கடன் மீதி ரூபா 53,494,203 ஆக இருந்த போதிலும், திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி ரூபா 53,480,611 ஆக இருந்தது. அதன்படி ரூபா 13,592 இனங்காணப்படாத வேறுபாடொன்றாக இருந்தது.

(iv) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்ட திணைக்களப் புத்தகங்களின்படி கடன் மீதிகளும், திறைசேரிப் புத்தங்களின் படியான கடன் மீதிக்கும் இடையே ரூபா 288,981 தொகையான வேறுபாடு காணப்பட்டது. அந்த வேறுபாடு இரட்டிப்பு வழுவாக காண்பிக்கப்பட்டு கணக்கிலிருந்து ரூபா 324,634 தொகை அகற்றப்பட்டிருந்தது. அதன்படி மேலும் ரூபா 35,653 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் 02 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சிற்குரிய 14 பிரிவுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 12 பிரிவுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

----------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவான காலத்திற்குரிய அமைச்சினால் தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 78,373,678 ஆகும்.

**1.6 இணக்கமின்மைகள்**

----------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

------------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94(1) | 1,815,318 | செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 128(1)ஒ | 31,200 | 4 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சமூகமளித்த நூற்றி எழுபத்து இரண்டு (172) உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்குத் தேவையான அறைகளின் எண்ணிக்கையை விட 24 அறைகள் மேலதிகமாகப் பெறப்பட்டு அதற்காக |

ரூபா 31,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 880 - அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் படி அமைச்சில் பிணை வைக்கவேண்டிய எந்த உத்தியோகத்தரும் பிணை வைத்திருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 1646 - மீளாய்வாண்டில் 12 வாகனங்களின் ஓட்ட அட்டவணையும், மாதாந்தப் பொழிப்பும், 18 வாகனங்களின் மாதாந்தப் பொழிப்பும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**1.7 செயலாற்றல்**

**--------------------**

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சிறுவர் செயலகம்

--------------------------------

அமைச்சினால் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உணவு மற்றும் போசனை தொடர்பாக அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ‘‘செனஹச தடாக’’ என்ற பெயருடைய பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் 100 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 280,000 தொகை செலவில் 57 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) உணவு மற்றும் போசனை தொடர்பாக, வீடு வீடாக விழிப்புணர்வூட்டும் 200 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அமைச்சு திட்டமிட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,000,000

நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் 157 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன்படி 43 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிராததுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 220,000 தொகை அதாவது 22 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஆசிரியர்களின் இயலளவை முன்னேற்றுவதற்காக 200 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,730,000 தொகை செலவில் மீளாய்வாண்டின் போது 173 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

(iv) 30 மாதிரி சிறுவர் கிராமங்களை தாபிப்பதற்காக ரூபா 4,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,240,000 தொகை செலவிடப்பட்டு 15 சிறுவர் கிராமங்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

(v) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பகிர்ந்தளிப்பதற்காக 2012 திசெம்பர் 20 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 200 கல்வி உபகரணத் தொகுதிகளில் 96 மாத்திரம் 2013 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய மேலும் 86 தொகுதிகள் 2014 திசெம்பர் மாதத்தின் போது பகிர்ந்தளிக்கப்பட்டது. மீதி 18 உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு 2 வருடங்கள் கடந்திருந்தும் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்காக பகிர்ந்தளிப்பதற்கு 2013 திசெம்பர் 20 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 700 நீர் வடிகளில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவும் பகிர்ந்தளிக்கப்பட்டிராததுடன் 2014 திசெம்பர் வரையிலும் 94 நீர்வடிகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய பெண்கள் குழு

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தோட்டத்துறையை அண்மித்த சமூகத்தைக் கருத்திற்கொண்டு சட்ட ஆலோசனைகளை வழங்குதல், மதியுரை மற்றும் விழிப்புணர்வூட்டும் வகையில் நடமாடும் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 200,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித பயன்படுத்தலுமின்றி அரசியலில் பெண்கள் வலுவூட்டும் தமிழ் டிப்ளோமா பாடநெறியின் கட்டணத்தின் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) விவரண திரைப்படங்களின் மூலம் தோட்டங்களைச் சார்ந்த மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 100,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 16,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறான வேலைத்திட்டமொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கொள்கைகளைத் தயாரிப்பவர்களுக்காக 02 செயலமர்வுகளை நடாத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 200,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு செயலமர்வேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்காக ரூபா 10,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது எவ்வித கலந்துரையாடலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(v) பெண்கள் குழுவின் சட்டப்பிரிவை வலுப்படுத்துவதற்காக முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மதியுரை உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 செயலமர்வுகளை நடாத்துவதற்காக ஆண்டின் போது ரூபா 300,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது எந்த செயலமர்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.8 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெண்கள் வலுப்படுத்தல் அடிப்படையின் கீழ் 56 சிறிய நிதிக் கிளைகள் பேணப்பட்டிருந்ததுடன் அதில் 20 நிதிக் கிளைகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றியளிக்காத நிலையில் காணப்பட்டது.

(ஆ) சுழற்சி கடன் திட்ட முறைமை 154 பிரதேச செயலகப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் கடன்செலுத்தாது புறக்கணித்த 723 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 1.9 வங்கிக் கணக்குகள் செயற்பாடுகளில் குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 3,860 | - | 3,860 |
| (ii) | இனங்காணப்படாத வரவு | 7,908 | 60,218 | 68,126 |
| (iii) | இனங்காணப்படாத செலவு | 277,038 | 3,565 | 280,603 |

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 23 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 12 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,424 | 1,160 | 264 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 68 | 68 | - | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை)* | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 1,535 | 1,266 | 272 | 03 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இரண்டாம் நிலையில் 264 பதவிகளும், மூன்றாம் நிலையில் 05 பதவிகளும் மற்றும் சிரேஷ்ட நிலையில் 03 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த பதவிகளை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 217 – சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிறுவர் நன்னடத்தை, பாதுகாவல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் "செவன சரண கெபகறு மாபிய" திட்டத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டுநிதிக் கணக்கு

நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு முறையான அங்கீகாரமின்றி ரூபா 20,000 எல்லையினை விஞ்சி ரூபா 120,000 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(இ) பொது வைப்புக் கணக்கு

நெண திரிய மற்றும் செவன சரண கெபகறு மாபிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 4,811,216 உரிய செயற்பாடுகளில் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைந்த காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,130,817 ஆகும்.

## 2.5 இணக்கமின்மைகள்

---------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

-----------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (அ) நிதிப்பிரமாணம் 165(1) | 6,481,820 | செவன சரண மாபிய திட்டத்தின் கீழ் கிடைத்த பணம் பதிவேடொன்றில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 168(1) | 2,345,872 | திணைக்களத்திற்குக் கிடைத்த ரூபா 2,231,873 தொகையான பெறுவனவுகளுக்காக ஒரு மாதமளவிலான காலதாமதத்தின் பின்னர் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 114,000 பெறுவனவுகளுக்காக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 177(1) | 646,000 | திணைக்களத்திற்குக் கிடைத்த காசோலைகள் உடனடியாக வங்கியிலிடப்படாமல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கையில் வைத்திருந்து வங்கியிலிடப்பட்டிருந்தது. |

## 2.6 செயலாற்றல்

2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்

செவன சரண கெபகறு மாபிய திட்டம் மற்றும் நெண திரிய நிகழ்ச்சித்திட்டத்திற்குக் கிடைத்த நன்கொடைகளிலிருந்து ரூபா 4,811,216 தொகை நலனாளிகளின் பிள்ளைகளுக்குச் செலுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கிடைத்த பணத்திலிருந்து 73 சதவீதம் அளவில் நன்கொடையாளிகளினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் உரிய நலனாளிகளின் பிள்ளைகளுக்கு செலுத்தாமையினால் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய வட்டியும் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) திட்டமிடல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அடையப்பட்ட செயல்முன்னேற்றத்துடன் ஒப்பீடுசெய்த போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள தவறியிருந்தது.

(i) தெருப் பிள்ளைகளுக்காக 500 நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 870,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 850,000 செலவிடப்பட்டு 275 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் 225 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வில்லை.

(ii) நிறுவனமயப்படுத்தப்பட்ட 200 பிள்ளைகளுக்கு வதிவிடப் பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 20 பிள்ளைகள் மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர். முழுமையான பயிற்சிக்காக ரூபா 150,000 செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இதற்காக ரூபா 1,500 செலவிடப்பட்டிருந்தது.

(iii) நிறுவனமயப்படுத்தப்பட்ட 200 பிள்ளைகளுக்கு இயலுமை முன்னேற்றத்திற்கான பயிற்சியினை வழங்குவதற்கு ரூபா 200,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 122,000 தொகை செலவிடப்பட்டு 54 மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(iv) உத்தியோகத்தர்களின் இயலுமையை முன்னேற்றும் பயிற்சிக்காக 100 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 150,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 8,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறிக்கை இணக்கஞ் செய்யப்படாமை

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயலாற்றல் அறிக்கை, ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட கோவைகளுக்கிடையே பின்வரும் தகவல்களில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | 2013 இன் செயலாற்றல் அறிக்கை | 2013 இன் ஆண்டறிக்கை | 2013 ஆம் ஆண்டின் கோவைகளின் பிரகாரம் |
|---|---|---|---|
| | பிள்ளைகளின் எண்ணிக்கை | பிள்ளைகளின் எண்ணிக்கை | பிள்ளைகளின் எண்ணிக்கை |
| செவன சரண உதவி | 117 | 108 | 95 |
| தெருப் பிள்ளைகளுக்கான நலன்புரி | 275 | - | 195 |

## 2.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காகக் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 2,337 கூட்டுப்பெறுமதியான 2 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 முகாமைத்துவ நலிவுகள்**

----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சர்வதேச சிறுவர் தின கொடி விற்பனை, சிறுவர் உரிமை உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்வதற்காக திணைக்களம் 22 மாவட்ட செயலகங்கள் மற்றும் 297 பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்கு ரூபா 54,230 பெறுமதியான 740,850 கொடிகள் வழங்கப்பட்டிருந்தன. 2014 மே 10 ஆந் திகதி வரையில் 519,300 கொடிகள் வழங்கப்பட்டு மாவட்ட செயலகங்கள் மற்றும் 221 பிரதேச செயலகங்களிலிருந்து அந்தக் கொடிகளின் பெறுமதி பெறப்பட்டிருக்கவில்லை. அந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட கொடிகளிலிருந்து விற்பனை செய்யப்பட்ட அளவு மற்றும் எஞ்சியவை தொடர்பான விபரங்களை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) சிறுவர் இல்லங்களில் சிறுவர்களின் நிலைமையினை கணிப்பீடு செய்வதற்காக யுனிசெப் செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 2,589,169 தொகை தேசிய சமூக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2014 நவம்பர் மாதம் வரையிலும் கணிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**2.9 மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---------------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 240 | 239 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 212 | 169 | 43 |
| (iv) | ஆரம்ப நிலை | 16 | 14 | 02 |
| | மொத்தம் | 472 | 425 | 47 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 47 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.